# பன்முக ஆற்றல் கொண்டவர் - முத்தமிழறிஞர் கலைஞரால் ‘வள்ளல் நேசன்’ எனப் பாராட்டப் பெற்றவர், எனது மைத்துனர் டாக்டர் ஜெய.இராஜமூர்த்தி!

## மணவிழாவில் முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஆன்மீகச் சொற்பொழிவாளராக, கவிதை புனையும் ஆற்றலைப் பெற்றவராக என ஒரு பன்முகத்தன்மையைக் கொண்டவராக விளங்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய டாக்டர். ராஜமூர்த்தி அவர்கள்.

‘நேசம் விரும்பும் நெருப்புப் பூக்கள்’, ‘எனது அம்பறாத் தூணியில் இருந்து’ என்ற புரட்சிகரமான கவிதை நூல்களை எழுதி வெளியிட்டு இருப்பவர்.

‘குறள்வழியில் அருட்செல்வர்’, ‘சிலப் பதிகாரத்தில் அறம்’ என்ற கட்டுரைகளை எழுதி எல்லோருடைய மனதிலும் இடம் பிடித்திருப்பவர். ராஜமூர்த்தி அவர்களைப் பொறுத்தவரையில் கம்பரைப் பற்றியும் பேசுவார்; வள்ளலாரைப் பற்றியும் பேசுவார். அந்த அளவிற்கு ஆற்றலைப் பெற்றவராக விளங்கிக் கொண்டிருப்பவர்.

இன்றைக்கு வள்ளலாரைப் பற்றி ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார். பேசிக் கொண்டிருக்கிறார் என்று சொல்ல மாட்டேன்; புலம்பிக் கொண்டிருக்கிறார் – உளறிக் கொண்டிருக்கிறார். அவர் யார் என்பதைப் பற்றி எல்லாம் நான் பேச விரும்பவில்லை. அது எல்லோருக்கும் தெரியும்.

**‘வள்ளல் நேசன்’ என முத்தமிழறிஞரால் பாராட்டப்பட்டவர்!**

ஆனால் அவருக்கெல்லாம் நேர்மாறாக, வள்ளலார் மீது ஆழ்ந்த பற்றும் புரிதலையும் கொண்டு பேசக்கூடியவர், அவரைப் பற்றி கட்டுரையாக எழுதக்கூடியவர், அந்த அளவிற்கு ஆற்றலைக் கொண்டவராக விளங்கிக் கொண்டிருப்பவர்தான் டாக்டர் ராஜமூர்த்தி அவர்கள். இவருடைய ஆற்றலைப் பற்றி, தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முறை ‘வள்ளல் நேசன்’ என்றுகூட ராஜமூர்த்தி அவர்களுக்குப் பாராட்டும் தந்திருக்கிறார். எனவே அப்படிப்பட்ட ஒரு ஆற்றலைப் பெற்றிருக்கும் ராஜமூர்த்தி அவர்களுடைய அருமை மகனுக்கு நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களோடு சேர்ந்து மணமக்களை வாழ்த்துகிற நேரத்தில் நானும் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

மணக்கோலம் கொண்டிருக்கும் மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளையும் பெற்று, சிறப்போடு வாழ்ந்திட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**இந்திய நாட்டிற்கும் ‘திராவிட மாடல்’ ஆட்சி!**

இன்றைக்கு நாடு போய்க்கொண்டிருக்கும் நிலைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு நல்லாட்சி உருவாக்கித் தருவதற்கு நீங்கள் எந்த அளவிற்குத் துணை நின்றீர்களோ, அந்த ஆட்சி – ஒரு ‘திராவிட மாடல்’ ஆட்சியாக இன்றைக்கு எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ, தேர்தல் நேரத்தில் வழங்கிய உறுதிமொழிகளை வாக்குறுதிகளை எல்லாம் எந்த அளவிற்குத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறதோ, அதுபோல் இந்திய நாட்டிற்கு ஒரு ஆட்சி தேவை.

காரணம், இன்றைக்கு ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சி – பா.ஜ.க ஆட்சி. அந்த பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து இன்று வரையில் தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்களையும் நிறைவேற்ற முன்வரவில்லை; அதற்கு நேர்மாறாக மக்கள் விரோதப் போக்கோடு மதத்தை, சனாதனத்தை இன்றைக்கு மக்களிடத்தில் திணித்து, ஒரு சர்வாதிகார ஆட்சியை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில்கூட ஒரு சட்டத்தை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார்கள்; ‘பொது சிவில் சட்டம்’. நாட்டில் ஏற்கனவே சிவில் சட்டம், கிரிமினல் சட்டம் என்ற சட்டங்கள் இருக்கின்றன. அதை நீக்கிவிட்டு பொது சிவில் சட்டமாகக் கொண்டு வந்து பாரதீய ஜனதா கட்சியின் கொள்கைகளை, அந்த ஆட்சியை எதிர்க்கக் கூடியவர்களை எல்லாம் பழிவாங்க வேண்டும் என்கிற நோக்கத்தில், மக்களுக்குத் துன்பங்களை, கொடுமைகளைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற அந்தத் தீய சக்தியோடு இன்றைக்கு அவர்கள் செய்து கொண்டிருக்கும் இந்தக் காரியங்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே அரசியல்வாதிகளை, அவர்களை எதிர்க்கக் கூடியவர் களை எல்லாம் C.B.I., I.T., E.D., என்ற அந்தத் துறைகளை எல்லாம் வைத்து மிரட்டிக் கொண்டிருக்கும் ஒரு ஆட்சி இன்றைக்கு ஒன்றிய ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிறது.

> **குழந்தை நல மருத்துவராக, ESI மருத்துவமனையின் இயக்குனராக, தமிழ்ப்பற்றுக் கொண்டவராக, முற்போக்குச் சிந்தனை கொண்டவராக, பட்டிமன்றப் பேச்சாளராக, இலக்கியச் சொற்பொழிவாளராக, ஆன்மீகச் சொற்பொழிவாளராக, கவிதை புனையும் ஆற்றலைப் பெற்றவராக என ஒரு பன்முகத் தன்மையைக் கொண்டவராக விளங்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய டாக்டர். ராஜமூர்த்தி அவர்கள்.**
>
> **‘நேசம் விரும்பும் நெருப்புப் பூக்கள்’, ‘எனது அம்பறாத் தூணியில் இருந்து’ என்ற புரட்சிகரமான கவிதை நூல்களை எழுதி வெளியிட்டு இருப்பவர்.**
>
> **‘குறள்வழியில் அருட்செல்வர்’, ‘சிலப்பதிகாரத்தில் அறம்’ என்ற கட்டுரைகளை எழுதி எல்லோருடைய மனதிலும் இடம் பிடித்திருப் பவர். ராஜமூர்த்தி அவர்களைப் பொறுத்தவரையில் கம்பரைப் பற்றியும் பேசுவார்; வள்ளலாரைப் பற்றியும் பேசுவார். அந்த அளவிற்கு ஆற்றலைப் பெற்றவராக விளங்கிக் கொண்டிருப்பவர்.**

இங்கே கூட இந்தத் திருமணத்தைப் பற்றிப் பேசுகிறபோது, இது குடும்பக் கட்சியாக, எங்கள் குடும்பத்தில் நடைபெறும் திருமணமாக நடக்கிறது என்றெல்லாம் பெருமையோடு சொன்னார்கள்.

இதைக் கேட்டால், இன்றைக்கு ஒன்றியத்தில் இருக்கும் பிரதமருக்கு கோபம்கூட வந்துவிடும். ஏனென்றால் மத்தியப் பிரதேசத்தில் சென்று, நம்முடைய பிரதமர் என்ன பேசியிருக்கிறார் என்றால்; மத்தியப் பிரதேசம் சென்றுகூட அவருக்கு தி.மு.க.வின் நினைவுதான் வந்திருக்கிறது. அங்கே போய் என்ன பேசியிருக்கிறார் என்றால், குடும்பத்தின் வளர்ச்சிக்காக ஆட்சியில் இருக்கிறார்கள், கட்சி நடத்து கிறார்கள் என்று விமர்சனம் செய்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் அடுத்த நாளே, இதே மண்டபத்தில் நடந்த ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகிறபோது, குறிப்பிட்டுச் சொன்னேன்”. இது குடும்பக் கட்சிதான். அண்ணாவால் உருவாக்கப்பட்ட – கலைஞரால் வளர்க்கப்பட்ட ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்பது குடும்பக் கட்சிதான். இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாடே தி.மு.க.வின் கட்சிதான். தமிழ்நாடே கலைஞருடைய குடும்பம்தான் என்று அன்றைக்கே நான் அழுத்தம் திருத்தமாகச் சொன்னேன்.

எனவே அப்படிப்பட்ட குடும்பத்தில் இன்றைக்கு நடைபெறும் இந்தத் திருமண நிகழ்ச்சியில் உங்களோடு சேர்ந்து நானும் மணமக்களை வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகிற நேரத்தில் மணமக்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், அந்தக் குழந்தைகளை அளவோடு பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்கப்போவதில்லை. ஆனால் பிறக்கும் அந்தக் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள் என்ற அந்த வேண்டுகோள் மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்து வைத்து வாழ்க மணமக்கள்... வாழ்க மணமக்கள்... புரட்சி கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும் “வீட்டிற்கு விளக்குகளாய்... நாட்டிற்குத் தொண்டர்களாய்” இருந்து வாழுங்கள்... வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**மண விழாவில் பங்கேற்றோர்!**

மணவிழாவில் அமைச்சர் எ.வ.வேலு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., தமிழ்நாடு பாடநூல் கழகத்தலைவர் திண்டுக்கல் லியோனி, டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., பேராசிரியர் சுப.வீரபாண்டியன், குத்தாலம் கல்யா ணம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்றுப் பேசினார்.

இறுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

டாக்டர் இரா.தனஞ்செயன் நன்றி கூறினார்.

மேலும் இம்மணவிழாவில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, ஆர்.காந்தி மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குடும்பத்தினர், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

வேலையின்மை, விலைவாசி உயர்வால் மக்கள் துயரம்!

## பா.ஜ.க.வின் வெற்று முழக்கங்கள் 2024 தேர்தலில் பலிக்காது!

### அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உறுதி!

புதுடெல்லி, ஜுலை 8 -

பா.ஜ.க.வின் வெற்று முழக்கங்களுக்கு 2024 தேர்தலில் மக்கள் பதிலளிப்பார்கள் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர், தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது: -

“மோடி அரசின் கொள்ளையால் பணவீக்கம், வேலையில்லாத் திண் டாட்டம் இரண்டும் தொடர்ந்து அதிக ரித்து வருகிறது.

ஆனால், பா.ஜ.க. அதிகார வெறியில் மூழ்கியிருக்கிறது. காய்கறிகளின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது.

நாட்டில் வேலையின்மை விகி தம் 8.45 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. கிராமங்களில் வேலையின்மை விகிதம் 8.73 சதவிகிதமாக உள்ளது. கிராமங்களில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் தேவை அதிகமாக உள்ளது, ஆனால் வேலை இல்லை. கிராமப்புற ஊதிய விகிதம் குறைந்துள்ளது.



இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, உங்கள் தோல்விகளை விளம்பரங்களின் மூலம் மறைத்துவிட வேண்டும் என்பதற்காகவே நீங்கள் தேர்தலுக்கு முன்னதாக ‘அச்சே தின்’ (நல்ல நாட்கள் வந்துகொண்டிருக்கின்றன), ‘அமிரித் கால்’ (நாடு சுதந்திரமடைந்த 75 ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடும் விழா) போன்ற முழக்கங்களை முன்வைத்து செயல்படுகிறீர்கள் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும்.

ஆனால் இந்த முறை அது நடக்காது, மக்கள் விழிப்புணர்வு அடைந்து, பா.ஜ.க.வுக்கு எதிராக வாக்களித்து உங்கள் வெற்று முழக்கங்களுக்கு பதிலளிப்பார்கள். பா.ஜ.க.வை ஆட்சியில் இருந்து அகற்றுவார்கள்.” இவ்வாறு மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டுள்ளார்.

---

பல்கலைக் கழகக் கூட்டத்தை ஆளுநர் மாளிகையில் எப்படி நடத்தலாம்? அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்த முயற்சி!

## ஆளுநர் ஆர்.என்.ரவி - எந்த அரசியல் செய்தாலும் தமிழ்நாட்டில் எடுபடாது!

### உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கண்டனம்!

சென்னை, ஜுலை 8 -

தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளில் குறுக்கிடுவதையும், அரசியல் செய்வதையும் ஆளுநர் ஆர்.என். ரவி வழக்கமாகக் கொண்டுள்ளார் என உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று அமைச்சர் க.பொன்முடி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, “அரசின் செயல்பாடுகளில் குறுக்கிடுவதையும், அரசியல் செய்வதையும் ஆளுநர் ஆர்.என். ரவி வழக்கமாகக் கொண்டுள்ளார். பல்கலைக்கழகங்களில் தனது ஆதிக்கத்தைச் செலுத்த ஆளுநர் முயற்சி செய்கிறார்” என அமைச்சர் க.பொன்முடி கண்டனம் தெரிவித்தார். அமைச்சர் க.பொன்முடி குறிப்பிட்டதாவது:-

ஒவ்வொரு துறையிலும் கவர்னர் ஆர்.என்.ரவி தொடர்ந்து அரசியல் செய்கிறார். பல்கலைக்கழக விவகாரங்களில் கவர்னர் தலையிடுகிறார். பல்கலைக்கழகங்களில் கூட்டங்களை நடத்தவேண்டும் எனக்கூறுபவர் கவர்னர் மாளிகையில் கூட்டம் நடத்துவது ஏன்? நாகை மீன்வள பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா கவர்னர் மாளிகையில் நடக்கும் என்பதை எப்படி ஏற்க முடியும்?

பல்கலைக்கழகங்களில் தனது ஆதிக்கத்தை செலுத்த ஆளுநர் முயற்சி செய்கிறார். பல்கலைக்கழகம் தன்னிச்சையாகச் செயல்படவில்லை என ஆளுநர் கூறுகிறார்;செயலாளரைக் கூட சந்திக்க முடியவில்லை என ஆளுநர் தெரிவிக்கிறார் ஆனால், நான் இல்லாமலேயே பல கூட்டங்களை அவர் நடத்தி இருக்கிறார்”

பல்கலைக்கழகங்களில் சில குறைகள் இருக்கலாம். தவறுகளை முறையாக சுட்டிக் காட்ட வேண்டும். ஆனால் அவருக்கு வேண்டப்பட்டவர்களை கொண்டு வருவதற்காக குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கக் கூடாது. தவறுகளை அமைச்சராகிய என்னிடமோ, செயலாளரிடமோ தெரிவிக்கலாம். ஆனால், நேரடியாக பத்திரிகைக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? மக்களால் தேர்வுசெய்யப்பட்ட அரசையே மதிக்காமல்கவர்னர் செயல்படுகிறார்.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் க.பொன்முடி, கல்வியின் தரத்தை உயர்த்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதையும் அதற்காகவே “நான் முதல்வன்” திட்டத்தை முதலமைச்சர் அறிவித்துள்ளதையும் குறிப்பிட்டார்.

---

## தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கு சிறப்புப் பேருந்துகள்!

தஞ்சாவூர், ஜுலை 8 -

தமிழ்நாட்டில் வார இறுதி நாட்களில் எப்போதும் பஸ்களில் வழக்கத்தை விட பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும். சனி, ஞாயிறு என தொடர்ந்து 2 நாட்கள் விடுமுறை என்பதால் பஸ்களில் பலர் வெளியூர் சென்று வருகின்றனர்.

மேலும் உறவினர் வீடுகளுக்கு செல்வது, சொந்த ஊர்களுக்கு செல்வது போன்றவை வார இறுதி நாட்களில் தான். இதனால் அந்த நாட்களில் சிறப்பு பஸ்கள் இயக்க வேண்டும் என்று பொதுமக்களிடம் இருந்து கோரிக்கைகள் வரப்பெற்றது. அதன் அடிப்படையிலும், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தவும், வெளியூர் செல்லும் பயணிகள் வசதிக்காகவும் 300 சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என்று அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் இயக்குனர் மோகன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டம் சார்பில் வார விடுமுறை நாட்களையொட்டி பொதுமக்களின் வசதிக்காக இன்று (வெள்ளிக்கிழமை) முதல் 10ந்தேதி (திங்கட்கழமை) வரை சிறப்பு பஸ்கள் இயக்கப்படும். 9ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 10ந் தேதி (திங்கட்கிழமை) ஆகிய நாட்களில் சென்னை தடத்தில் 200 சிறப்பு பஸ் களும், மற்ற தடங்களில் 100 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளது. இதனை முன்னிட்டு முக்கிய பஸ் நிலையங்களில் சிறப்பு அலுவலர்கள், பரிசோதகர்கள், பணியாளர்கள், பயணிகள் வசதிக்காக பணியமர்த்தப்பட்டு பஸ் இயக்கத்தை முறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (6.07.2023) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்திட பொதுவான கூட்டுறவுச் சந்தை (Coop Bazaar) செயலியினை துவக்கி வைத்தார். உடன் உணவு மற்றும் கூட்டுறவுச் செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந. சுப்பையன், கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு) திருமதி விஜயராணி ஆகியோர் உள்ளனர்.



திருச்சி உறையூர் லிங்கா நகர் பகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கூட்டுறவுத் துறையின் புதிய நியாய விலைக் கடையினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, கோட்டத் தலைவர் விஜயலட்சுமி கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் இளங்கோ நாகராஜ், பங்கஜம் மதிவாணன், விஜயா ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் ஹரி, தனபால், முத்து, பழனி, திருநாவுக்கரசு, தர்மசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.